செ.வெ.எண் :19 நாள் : 08.10.2018

# நாகப்பட்டினம் மாவட்டம்

## நாகப்பட்டினம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப.,அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பாக 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப இ.ஆ.ப.,அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து முகாமினை பார்வையிட்டு தெரிவித்ததாவது,

“நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1 முதல் 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு பார்வையின்மை, மனவளர்ச்சி குறைபாடு, குறை பார்வை, ஆட்டிசம் குறைபாடு, பேச இயலாமை, தசை சிதை குறைபாடு, காது கேளாமை, பன்முக இயலாமை, உடலியக்க குறைபாடு, அன்னப்பிளவு மற்றும் உதடு பிளவு போன்ற குறைபாடுகளுக்கு குழந்தை நல மருத்துவர்கள் குழு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களைக் கொண்டு சிறந்தமுறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த முகாமில் மருத்துவர் ஆலோசனையின் அடிப்படையில் தகுதியான மாற்றுத்திறன் உடைய குழந்தைகளுக்குத் தேவையான உபகரணங்களுக்கான அளவீடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மருத்துவமனையில் தேவையான சிகிச்சைகள் செய்யப்படும். மேலும் இந்த முகாமில் இதுவரை அடையாள அட்டை பெறாத தகுதியான மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள், மாத பராமரிப்பு உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, பேருந்து மற்றும் இரயில் பயணச் சலுகைகள் பெற்று வழங்கப்படும்.

இன்றைய தினம் (08.10.2018) நாகப்பட்டினம் ஒன்றியத்திற்கான மருத்துவ முகாம் அரசு தலைமை மருத்துவமனையில் துவக்கி வைக்கப்படுகிறது. இதே போன்ற முகாம்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறும். 10.10.2018 கொள்ளிடம் நல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 12.10.2018 கீழையூர் ஒன்றியம் திருப்பூண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 15.10.2018 குத்தாலம் அரசு மருத்துவமனையிலும், 17.10.2018 கீழ்வேளுர் அரசு மருத்துவமனையிலும், 22.10.2018 சீர்காழி அரசு மருத்துவமனையிலும், 24.10.2018 வேதாரண்யம் அரசு மருத்துவமனையிலும், 26.10.2018 மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலும், 29.10.2018 தலைஞாயிறு ஒன்றியத்தில் மணக்குடி வையாபுரி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும், 31.10.2018 செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியிலும், 02.11.2018

திருமருகல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. எனவே மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் கலந்துக் கொண்டு தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகள் மற்றும் நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலா் திருமதி.செ.அமுதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலா் திரு.விக்டர் மரிய ஜோசப், மாவட்ட அரசுமருத்துவமனை கண்காணிப்பாளா் மரு.முருகப்பன், அனைவருக்கும் கல்வித்திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளா் திரு.சாம்பசிவம் அனைவருக்கும் கல்வி இயக்க உதவித் திட்ட அலுவலா் திரு.பீட்டர் பிரான்சிஸ், மற்றும் அரசு மருத்துவா்கள் உட்பட பொதுமக்கள் பலா் கலந்துகொண்டனா்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**